| O.S.No. 182/2024 | PW1: திரு. பொன்னம்பலம்<br>த/பெ. திரு. தங்கவேல் | 02-04-2026 |
|---|---|---|

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**1 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை :**

1. எனது பூர்வீகம் சென்னை பெருங்களத்தூர். B.A., வரை படித்துள்ளேன். நான் பிறக்கும்போது எனது தந்தையின் தொழில் விவசாயம். நான் படித்து முடித்த பிறகு Industrial Department–ல் Assistant–ஆக 1980–ல் அரசுப்பணியில் சேர்ந்தேன். நான் 2006–ம் ஆண்டு விருப்பத்தின்பேரில் ஓய்வு பெற்றுவிட்டேன். தற்போது ஓய்வூதியம் பெற்று வருகிறேன். நான் பணி ஓய்வு பெற்ற பிறகு கல் குவாரி Business மற்றும் Blue Mettals என்ற தொழில் செய்து வருகிறேன். மேற்படி வியாபாரம் எனது பெயரில் செய்து வருகிறேன்.

2. மேற்படி தொழிலினை நான் திருவண்ணாமலை மாவட்டம், வெம்பாக்கம் தாலுக்காவிற்கு உட்பட்ட மேனலூர் கிராமத்தில் செய்து வருகிறேன். மேற்படி இடம் எனது தனிப்பட்ட சொத்தாகும். 2022–லிருந்து மேற்படி தொழில் செய்து வருகிறேன். என்னுடன் என் மகனும் வியாபாரத்தை பார்த்துக்கொள்கிறார். நான் இந்த வியாபாரத்தை சுமார் 20 ஏக்கரில் செய்ய தொடங்கினேன். 2022–ல் நான் அந்த இடத்தில் தொழில் தொடங்கும்போது 20 ஏக்கரினை ரூ.20 லட்சத்திற்கு வாங்கினேன். மேற்படி சொத்து எனது பெயரில் உள்ளது. ஆண்டிற்கு எவ்வளவு வருமானம் வருகிறது என்றால் தெரியாது, ஆனால் வருமான வரி செலுத்தி வருகிறேன். தாவா சொத்துக்கள் நான் ஏற்கனவே வாங்கிய 20 ஏக்கர் சொத்திற்கு பக்கத்தில் வருகிறது என்றால் சரிதான். தாவா சொத்துக்களை நான் சவுந்தரி அம்மாளிடமிருந்து கிரையம் பெற்றேன். சுமார் 5 ஏக்கர் வாங்கியதாக நினைவிருக்கிறது. தாவா சொத்து குறித்து ஆவணம் தாக்கல் செய்துள்ளேன்.

3. பிரதிவாதிகள் மீது இவ்வழக்கினை எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் நான் கிரையம் வாங்கியது செல்லாது என பிரதிவாதிகள் சொன்னதால், அது செல்லும் என இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன். சவுந்தரி அம்மாளிடம் என்ன மார்க்கெட் மதிப்பிற்கு கிரையம் வாங்கினீர்கள் என்றால் அரசு வழிகாட்டு மதிப்பின்படி கிரையம் பெற்றேன். 2 முதல் 5 பிரதிவாதிகள் அதிகமாக பணம் கேட்டார்கள் என்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் அதற்கு ஆவணங்கள் இல்லை. 2 முதல் 5 பிரதிவாதிகளை ஏமாற்றி குறைந்த விலைக்கு சொத்தினை கிரையம் வாங்கிக்கொண்டேன் என்று சொன்னால் சரியல்ல.

4. நான் எந்த அடிப்படையில் தாவா சொத்தினை கிரையம் வாங்கினேன் என்றால் கிரையம் கொடுத்தவருக்கு ஆதரவாக தீர்ப்பாகியிருந்தது, அரசு மதிப்பின்படி 6 சதவீதம் வட்டி கொடுத்து கிரையம் வாங்கினேன். அந்த வழக்கு எண் ஞாபகமில்லை. எனது பிரமாண வாக்குமூலத்தில் வழக்கு எண் பற்றி சொல்லியுள்ளேன். அந்த வழக்கானது அண்ணாமலைக்கும் சவுந்தரி அம்மாளுக்கும் நடைபெற்ற வழக்காகும். அந்த வழக்கினை சவுந்தரி அம்மாள் தாக்கல் செய்திருந்தார். அந்த வழக்கில் எப்போது தீர்ப்பு வழங்கப்பபட்டது என்றால் 2014-ல் தீர்பபு வழங்கப்பட்டது என்று நினைக்கின்றேன், ஆனால் சரியாக ஞாபகமில்லை. எந்த நீதிமன்றத்தில் அந்த வழக்கு நடந்தது என்று ஞாபகமில்லை. அந்த வழக்கு தீர்ப்புரையின் சாராம்சம் என்ன என்று தெரியுமா என்றால் தெரியும். அந்த வழக்கில் ரூ.90 லட்சத்துக்கு 6 சதவீதம் வட்டி என்று வழங்கப்பட்டது. சாட்சியானவர் ரூ.90,000/-த்துக்கு என்று மீண்டும் கூறுகிறார்.

5. O.S.No.338/2006 வழக்கில் நான் வாதியா பிரதிவாதியா என்றால் நான் அதில் தரப்பினர் இல்லை. அந்த வழக்கில் உள்ள சொத்தில் யார் யாருக்கு பாகம் என்று எனக்கு தெரியாது. O.S.No.338/2006 வழக்கு என்ன சாராம்சத்திற்காக போடப்பட்டது என்றால் சொசைட்டியில் கடன் வாங்கியது சம்மந்தமாக போடப்பட்ட வழக்காகும். O.S.No.338/2006 வழக்கில் யார் யார் எவ்வளவு கடன் வாங்கினார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் அது எனக்கு தெரியாது. இந்த வழக்கில் பிரதிவாதிகள் பணம் செலுத்த வேண்டும் என்ற விவரம் எப்படி தெரியும் என்றால் நான் நிலத்தினை கிரையம் வாங்கியதால் அவர்கள் எனக்கு பணம் கொடுக்க கடமைப்பட்டவர்கள்.

6. யார் அ.வ.எண்.338/2006 வழக்கில் ஜெயித்தார்களோ அவர்கள் பணம் கட்ட சொன்னதால் நான் கிரைய பணம் கட்டினேன். நீதிமன்றத்தில் மொத்த பணத்தையும் கட்ட சொல்லி தீர்ப்பு வழங்கப்பட்டதால் அதன் அடிப்படையில் நான் பணம் கட்டினேன். அ.வ.எண். 338/2006 வழக்கில் தீர்ப்புரையில் கிரையம் பெற்றவர்கள்தான் பணத்தினை செலுத்த வேண்டும் என்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டதா என்றால் அது எனக்கு தெரியாது. இந்த வழக்கின் பிரதிவாதிகள் அ.வ.எண். 338/2006 வழக்கின் வாதிகளா என்றால் எனக்கு நினைவில்லை. சவுந்தரி அம்மாளின் அப்பா பெயர் என்ன என்றால் நினைவில்லை. 6-ம் பிரதிவாதியின் தந்தைக்கு வாரிசுகள் யார் என்றால் மொத்தம் 7 பேர் ஆகும். பொதுவாக ஒரு சொத்தின் உரிமையாளர் இறந்துவிட்டால் அவரது வாரிசுதாரர்களிடமிருந்து கிரையம் பெற வேண்டும் என்ற விஷயம் எனக்கு தெரியும்.

7. தாவா சொத்தை ஏற்கனவே சவுந்தரி அம்மாளும், ஜெகன்னாத முதலியாரும் அண்ணாமலை முதலியாருக்கு விற்பனை செய்தார்கள்.

அந்த கிரைய ஆவணத்தில் என்ன நிபந்தனை கண்டு கிரையம் ஏற்பட்டது என்ற விவரம் தெரியுமா என்றால் அது எனக்கு தெரியாது. அந்த கிரைய ஆவணத்தில் அவர்கள் பெற்ற கடனை அண்ணாமலை முதலியார் செலுத்த வேண்டும் என்றும், மீதி கிரைய தொகையை பெற்றுக்கொண்டு கிரைய பத்திரம் எழுதிக்கொடுக்க வேண்டும் என்று வாசகம் கண்டு எழுதப்பட்டுள்ளது என்றால் அது எனக்கு தெரியும். அ.வ.எண்.338/2006 வழக்கின் தீர்ப்புரையில் பிரதிவாதிகளான அண்ணாமலை முதலியாரின் வாரிசுகள்தான் வாதிகளுக்கு தொகை கொடுக்க வேண்டும் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றால் அது எனக்கு தெரியும்.

8. அந்த தீர்ப்பின்படி அ.வ.எண். 338/2006 வழக்கின் பிரதிவாதிகள் அந்த வழக்கின் பணம் செட்டில்மென்ட் செய்துவிட்டார்களா என்றால் பணம் செட்டில்மென்ட் செய்துவிட்டார்கள். எந்த தேதியில் பணம் செட்டில்மென்ட் செய்யப்பட்டது என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் தாக்கல் செய்துள்ளேன். அண்ணாமலையின் வாரிசுகள் அருண்குமார் மூலமாக செட்டில்மென்ட் செய்தார்கள். சவுந்தரி அம்மாள், லலிதா, பன்னீர் செல்வம் ஆகியோர்களுக்கு பணம் செட்டில்மென்ட் செய்யப்பட்டது. வாதிகள் செட்டில் செய்ததற்கான ரசீதினை தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் தாக்கல் செய்துள்ளேன். பொதுவாக ஒரு சொத்தினை வாங்கும்போது கிரைய தொகை முழுமையாக விற்பனை செய்தவருக்கு சென்றால்தான் அந்த கிரையம் முழுமையாகும் என்ற விஷயம் எனக்கு நன்கு தெரியும். வழக்கு சொத்தினை எந்த தேதியில் எந்த ஆவண எண்ணின்படி கிரையம் வாங்கினீர்கள் என்றால் ஞாபகமில்லை. எந்தஆவணத்தின் அடிப்படையில் கிரையம் வாங்கினீர்கள் என்றால் நீதிமன்ற உத்தரவின்படி கிரையம் வாங்கினேன்.

9. வா.சா.ஆ.11 ஆவணத்தின்படி 2 ஏக்கர் 8 சென்ட்டினை அண்ணாமலையின் வாரிசுகளிடமிருந்து 29.07.2024 அன்று கிரையம் வாங்கினேன். வா.சா.ஆ.11 மற்றும் வா.சா.ஆ.12 கிரைய ஆவணங்களில் அ.வ.எண். 338/2006 வழக்கின் தீர்ப்பின்படி கிரையம் பெற்றதாக வாசகம் கண்டு எழுதப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

(1 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

ஒம்/- பொன்னம்பலம்

சாட்சியின் கையொப்பம்

என்னால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

M VIGNESH PRABU

Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.04.02 13:17:53 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**
**செய்யாறு.**